1981 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட 2 நாட்களுக்கு முன் என்னுடன் வந்திருநதார்கள். அந்தப் பால வேலை நடைபெற்று வருகின்றது. கண்டிப்பாக சீக்கிரத்தில் முடிக்கப்படும்.

வேலூர் பேருந்து நிலையத்தினை விரிவு படுத்துதல்.

* வினா எண் 715—திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேலூர் பேருந்து நிலையத்தை விரிவு படுத்தும் வேலை எப்போது துவங்கும்? திட்ட மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: திட்டம் வேலூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியினுடைய பெருக்கம் அளவுக்கு மீறி போகின்றது. நாள்தோறும் திருவிழாக் கூட்டம் போல மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றது. எனவே உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம்தான் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு .ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த பஸ் நிலையத்தில் நிறைய ஆட்கள் பல ஊர்களில் இருந்து வந்து போகின்ற நிலைமை இருக்கிறது. இது இந்த நகரத்தின் மையமாக இருக்கிற காரணத்தினால், அங்கே கழிப்பிடம் கூட இல்லாமல் மக்கள் ரோட்டிலே உட்காரக் கூடிய நிலை இருப்பதாலும், அதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 36 இலட்சம் ரூபாய்க்கு ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அது பரிசீலனையில் இருந்து வருகிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரமாக உள்ள வேலூரில் அந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லாமல், விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிசீலனை பண்ணாமல் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கம் என்றால் பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்காக ஆகக்கூடிய செலவுகள் பூராவையும் அந்த நகராட்சிகள் ஏற்றுக் கொள்வதற்குப் பணம் இல்லை என்று சொன்னால், அரசாங்கம் கடனாகவாவது, அல்லது மானியமாகவாவது கொடுக்குமா? பல இடங்களில், மாவட்டத் தலைநகரங்களில் பஸ் ஸ்டாண்டு சரியாக இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களை முன்னிட்டு, இந்த ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப குழந்தைவேலு : தலைவரவர்களே, வளர்ந்து வருகின்ற ஜனத்தொகைக்குத் தக்கவாறு பஸ் நிலையங்களை எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே பணிகள் நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக எந்தெந்த நகராட்சிகளில் பணம் இல்லாமல் இருக்கின்றதோ அவைகளுக்கும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கடன் வழங்கியாவது அவைகளைச் செய்ய முடியுமா என்பதற்காகத்தான் இந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சிகளாக இருந்தாலும் பேரூராட்சிகளாக இருந்தாலும் அவைகளுக்கும் கூட இதை விரிவுபடுத்துகின்ற வகையிலே தான் திட்டங்களை உருவாக்கி இருக்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்ட அனைத்து ஒன்றியங்களையும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளுதல்.

*வினா எண் 717—திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தர்மபுரி மாவட்டத்தைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் தன்னிறைவு திட்ட ஒன்றியங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தர்மபுரி மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல் கட்டத்திலும் எட்டு ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. அதே போன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களை முதல கட்டத்திலும், பதிமூன்று ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாம் கட்டத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. மற்ற ஒன்றியங்களும் அடுத்து வரும் ஆண்டுகளில் சேர்க்கப்படும்.